
## திராவிடத்தால் வாழ்கிறோம்

937

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

24

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# காதலுக்குக் காவல் 'காவலாண்டியூர்'!



1999-ஆம் ஆண்டு வெளியான தமிழ்த் திரைப்படம் 'சின்னத்துரை'. காதல் ஜோடி ஒன்று திருமணம் செய்து கொள்வதற்காக, ஊரை விட்டு ஓடும் காட்சியுடன் படம் தொடங்கும். அந்த ஜோடி பேருந்தில் ஏற, 'எங்கே போறீங்க? காவலாண்டியூரா? உங்கள மாதிரி காதலர்களுக்கு அங்கதான பாதுகாப்பு' என நடத்துநர் கூறுவார். அந்த சமயம் பார்த்து, பெண் வீட்டார் அங்கு வர, பேருந்தில் இருந்து இறங்கி, அந்த ஜோடி ஓட்டம் பிடிக்கும். அவர்கள் சென்று நிற்கும் இடம் காவலாண்டியூர். அந்த ஊரின் மைல்கல்லைப் பார்த்தவுடன் அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு அடைவர். பின்னர், அந்த ஊர் பஞ்சாயத்தில் இருவருக்கும் திருமணம் செய்துவைத்துப் பாதுகாப்பாக அனுப்பி வைப்பார்கள்.

இது கற்பனை காட்சி அல்ல. சாதி - மதம் - இனம் - மொழிகளைக் கடந்து காதல் புரியும் இணையர்களுக்குப் பாதுகாப்பு தரும் காவலாண்டியூர் உண்மையிலேயே இருக்கிறது. சேலம் மாவட்டம், கொளத்தூரில் இருந்து ஈரோடு மாவட்டம், குருவரெட்டியூர் வரை சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவுக்கு நீண்ட 'பாலமலை'யின் அடிவாரத்தில் ஒட்டியிருக்கும் சின்னஞ்சிறு கிராமம்தான் இந்த காவலாண்டியூர்.

தந்தை பெரியார் காலத்தில் இருந்தே மேட்டூர், கொளத்தூர், குருவரெட்டியூர் பகுதிகள் திராவிட இயக்கத்தின் வலுவான கோட்டைகள். அதன் தாக்கம் காவலாண்டியூரையும் மெல்லத் தொட்டது. அந்த ஊரைச் சேர்ந்த சித்துசாமி, பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும்போது, மேட்டூர் அணைக்கு பள்ளியின் மூலம் அழைத்துச் செல்லப்பட்டார். சைக்கிளில் செல்லும்போது பாறை ஒன்றில் "கடவுள் இல்லை, சர்வ சக்தியுள்ள கடவுளின் கோயிலுக்குப் பூட்டு எதற்கு?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்ததைக் கண்டார்.



சித்துசாமி, காவலாண்டியூர்.

தீவிர கடவுள் பக்திமானாக இருந்த சித்துசாமிக்கு, இந்த நாத்திகச் சிந்தனைகள் அவருக்குள் பொறி தட்டச் செய்தன. அந்த ஆண்டு பள்ளித்தேர்வில் தோல்வி அடைந்தபோது, நாம் வணங்கிய கடவுள்கள் ஏன் நம்மை தேர்ச்சி அடையச் செய்யவில்லை என்று சிந்தித்தார். வீட்டின் அருகே இருந்த கல்லில், சுண்ணாம்பை அள்ளிச் சென்று, 'கடவுள் இல்லை' என எழுதிவைத்தார். கைகளால் சுண்ணாம்பை அள்ளிச்சென்றதில், காயங்கள் ஆகிவிட்டன. 'கடவுள் இல்லை' என்று எழுதியதால்தான் கைகள் புண்ணாகிவிட்டன என்று பெற்றோரிடம் ஏச்சும் விழுந்தது.

பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, பவானி அருகே உள்ள வாசவி கல்லூரியில் தமிழ்த்துறையில் மாணவராக இணைந்தார் சித்துசாமி. அந்த காலகட்டத்தில், அருகே உள்ள குமாரபாளையத்தில் ஆசிரியர் கி.வீரமணி பங்கேற்ற பகுத்தறிவாளர் கழகக் கூட்டம் நடைபெற்றது. அங்கு சென்று கருத்துகளை உள்வாங்கினார் சித்துசாமி. அடுத்து, 1979-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி பெரியார் நூற்றாண்டு தொடங்கியது. அந்த நாளில் கோவை மாவட்டத்தில் இருந்து ஈரோட்டைத் தனியாகப் பிரித்து பெரியார் மாவட்டமாக அறிவித்தார் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அதையொட்டி, ஈரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சித்துசாமியை, நாவலர் நெடுஞ்செழியன் பேசிய நாத்திகக் கருத்துகள் வெகுவாக ஈர்த்தன. பெரியார் தொண்டராகவும் உருவெடுத்தார் சித்துசாமி. அதன்பிறகு, அங்கு நடைபெற்ற சாதி ஒழிப்புப் பணிகளும், சாதி மறுப்புத் திருமணங்களை நடத்திவைத்த நிகழ்வுகளும்தான் 'சின்னத்துரை' திரைப்படத்தில் இடம்பெறும் அளவுக்கு வரலாறாக வளர்ந்தன.

வேரில் இருந்து அந்த வளர்ச்சியை வரும் வாரங்களில் காண்போம்...!

...பயணிப்போம்.

---

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

74

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# கழகம், ஜனநாயகத்தைக் காக்கும்!



**குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில், தமிழர் என்ற முறையில் பா.ஜ.க. வேட்பாளரை தி.மு.க. ஆதரிக்க வேண்டும் என்றும், அப்துல்கலாமை ஆதரிக்காமல் இருந்தது போன்ற தவறு நடக்கக்கூடாது என்றும் எதிர்க்கட்சியினர் ஆலோசனை மழை பொழிகிறார்களே?**

அவர்கள் சொல்வது இரண்டுமே தவறு. தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி அப்துல்கலாம் அவர்களை, குடியரசுத் தலைவர் வேட்பாளராக நிறுத்தியது பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில்தான். அந்தக் கூட்டணியிலும் ஆட்சியிலும் பங்கேற்றிருந்த முக்கிய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். அதனால், தி.மு.க.வின் ஆதரவு அப்துல்கலாமுக்கே இருந்தது. அத்துடன், அப்போதைய எதிர்க்கட்சியான காங்கிரசும் அப்துல்கலாமுக்கு ஆதரவு தந்தது. 2002-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், அவர் அமோக வெற்றி பெற்று இந்தியாவின் குடியரசுத் தலைவரானார். எனவே, அப்துல்கலாமை குடியரசுத் தலைவராக்கியதில் தி.மு.க.வின் பங்கை மறைக்க முடியாது.

2007-ஆம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலின்போது தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில், பிரதீபா பாட்டீல் நிறுத்தப்பட்டார். அப்போது, அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் அப்துல்கலாமை இரண்டாவது முறையாக நிறுத்துவதற்கு வலியுறுத்தின. அவரோ, 'ஒருமனதான ஆதரவு தனக்கு இருந்தால் மட்டுமே போட்டியிடுவேன்' எனச் சொல்லி விட்டார். பா.ஜ.க. சார்பில் பைரோன்சிங் ஷெகாவத் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

'அ.தி.மு.க. இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கும்' என ஜெயலலிதா அறிவித்தார். ஆனால், குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளன்று, அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பா.ஜ.க. வேட்பாளரான பைரோன் சிங் ஷெகாவத்துக்கு வாக்களித்தனர். "எனக்கே தெரியாமல் இது நடந்து விட்டது" என்று ஜெயலலிதா சொன்னார். அரசியல் உலகம் சிரித்தது. அப்துல்கலாம் போட்டியிடாத அந்தத் தேர்தலில், இந்தியாவின் முதல் பெண் குடியரசுத் தலைவராக பிரதீபா பாட்டீல் வெற்றிபெற்று பொறுப் பேற்றார். இதிலும் முக்கியப் பங்காற்றியது தி.மு.க.

முற்போக்குத் திட்டங்களை நடைமுறைப் படுத்திய பிரதமர் இந்திரகாந்திக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், 1969-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில், அவர் நிறுத்திய வி.வி.கிரி, 1977-இல் தி.மு.க. அங்கம் வகித்த ஜனதா கூட்டணியின் சார்பில் நிறுத்தப்பட்டவரும் கலைஞரின் மீது மதிப்பு கொண்டவருமான நீலம் சஞ்சீவ ரெட்டி, 1982-இல் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளர் ஜெயில்சிங், 1997-இல் இந்தியாவின் முதல் பட்டியல் இன குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன், 2012-இல் மூத்த அரசியல்வாதி பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு உறுதியான ஆதரவைத் தெரிவித்து, வெற்றி பெற வைத்த வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.

அதே நேரத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த குடியரசுத் தலைவரான ஆர்.வெங்கட்ராமன்தான், 1991-ஆம் ஆண்டு ஆளுநரின் கையெழுத்து இல்லாமலேயே, 356-வது பிரிவின்கீழ், கழக ஆட்சியைக் கலைத்து ஜனநாயகப் படுகொலை செய்தவர் என்பதும் நினைவுகூரத்தக்கது..

...வினா தொடரும்.

---

## திராவிடப் பள்ளியில் மாணவர் சேர்க்கை!




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின் சார்பில், தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் செயலாளர் பொள்ளாச்சி மா.உம[illegible]தி அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு செயல்படும் திராவிடப் பள்ளி, 2020-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

மானுடவியல், திராவிட இயக்கத்தின் தோற்றம், நீதிக்கட்சி வரலாறு, சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிடர் கழக வரலாறு, சாதி ஒழிப்பு, சாதியத்தின் தோற்றம், பெண் விடுதலை, பகுத்தறிவு, மொழி உரிமை, பண்பாட்டுச் சூழலியல், திராவிட இயக்கத்தின் தாக்கம், ஈழ விடுதலைப் போரும் திராவிட இயக்கமும் எனப் பல்வேறு தலைப்புகளில் திராவிட இயக்கத் தலைவர்கள், முன்னோடிகளால் எழுதப்பட்ட நூல்களைப் பாடத்திட்டங்களாகக் கொண்டு திராவிடப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இளநிலை, முதுநிலை என இரண்டு பிரிவுகளாக, தலா ஓராண்டு வகுப்புகள் மாணவர்களுக்கு நடத்தப்படுகின்றன. ஆண்டு இறுதியில் தேர்வு வைக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் 2,100 பேர் திராவிடப் பள்ளியில் இணைந்து, திராவிட இயக்கம் குறித்து விரிவாக அறிந்துகொண்டு சான்றிதழ் பெற்றுள்ளனர். திராவிடப் பள்ளியின் சார்பாக 'திராவிட நடை' என்ற முன்னெடுப்பின் ஊடாக, திராவிட இயக்க வரலாற்றுத் தடங்களை அறிந்துகொள்ளும் வகையில் நேரடிச் சுற்றுலாவுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறது. சென்னையில் பல்வேறு இடங்களுக்கும், கேரளாவின் வைக்கம் நினைவிடத்திற்கும் திராவிடப் பள்ளி மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

திராவிட இயக்க வரலாற்றை, பாடத்திட்டத்தின் வாயிலாகவும், நேரடி கள அனுபவத்தின் ஊடாகவும் கற்றுத்தரும் அரும்பணியைக் கடந்த 5 ஆண்டுகளாக சிறப்புடன் செய்து வரும் திராவிடப் பள்ளியின் ஆறாம் ஆண்டு மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. திராவிடப் பள்ளியில் மாணவர்கள் இணைய கடைசி நாள் 17.09.2025. www.dravidam.org, www.dravidapalli.com ஆகிய இணையதளப் பக்கங்களிலும் விண்ணப்பிக்கலாம்.

---

## ஃப்ளாஷ்பேக்



### பொங்கல் திருநாள் வாழ்த்து!



'வைலட்' மேரி

2016-ஆம் ஆண்டு, பொங்கல் திருநாளை முன்னிட்டு, பகுதிக் கழகத்தின் சார்பில், தலைவரிடம் வாழ்த்துப் பெறச் சென்றோம்.

வட்டத் துணைச் செயலாளர் அம்சவேணி, தொண்டர் அணி அமைப்பாளர் ஈ.சத்யா மற்றும் தர்மா வெங்கட் ஆகியோருடன் சென்றிருந்தோம்.

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளை முன்னிட்டு, தலைவரிடம் வாழ்த்துப் பெறுவது அந்த ஆண்டைச் சிறப்பானதாக்கும். கழகப் பணிகளுக்கு உற்சாகம் தரும்.

– 'வைலட்' மேரி
பகுதிக் கழகத் துணைச் செயலாளர்,
ஆயிரம் விளக்கு கிழக்கு, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### மும்முனைப் போராட்டம், கைது!

1953-ஆம் ஆண்டு மும்முனைப் போராட்டம் நடத்துவதென லால்குடி, சிதம்பரம், சென்னை மாநாடுகளில் முடிவு செய்து, ஜூலை மாதம் 13-ஆம் நாள் மாலை நடந்த செயற்குழுக் கூட்டத்தில் உறுதிப்படுத்தி, போராட்டத்தில் இறங்க முடிவுசெய்த நிலையில், பேரறிஞர் அண்ணா, நாவலர் கே.ஏ.மதியழகன், ஈ.வெ.கி.சம்பத், என்.வி.நடராசன் ஆகிய ஐவரும் கைது செய்யப்பட்டு, 10 நாட்கள் சிறைவைக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131